




# திராவிட மாடல் அரசு

58

# ஊரெல்லாம் விளையாட உன்னதத் திட்டம்!

**‘முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் எனும் நான்’ என்று உறுதிமொழி எடுத்துக்கொண்ட நாளில் இருந்து, தமிழ்நாட்டின் வளர்ச்சியை முன்னோக்கிக் கொண்டு செல்லும் பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறார், நமது முதலமைச்சர். உள்ளடக்கிய வளர்ச்சியைக் கொண்ட அந்தத் திட்டங்களைத் தரவுகளோடு உலகுக்குப் பறைசாற்றுகிறது இந்தப் பகுதி....**

*‘நன்னடை நல்கல் வேந்தருக்குக் கடனே!’* என்ற சங்கப் பாடல் வரி ஒன்று உண்டு. அதாவது, தனது நாட்டில் உள்ள இளைஞர்களுக்கு நல்ல முறையில் போர்ப் பயிற்சி வழங்குவது, அந்த நாட்டின் அரசனுடைய கடமை என்பது இதன் பொருள்.

2000-ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் 2000-2001-ஆம் ஆண்டுக்கான நிதி நிலை அறிக்கையை முன்வைத்து சட்டமன்றத்தில் முத்தமிழிறஞர் கலைஞர் ஆற்றிய உரையின்போது, மேற்கண்ட வரியை மேற்கோள் காட்டி, “இளைஞர்களை ஆக்கப்பூர்வமான பணிகளில் ஈடுபடுத்திடவும், சிதறிக் கிடக்கும் அவர்கள் ஆற்றலைத் திரட்டிடவும், அவர்களை மன உறுதி படைத்தவர்களாகவும், எதிர்கால வாழ்வை நம்பிக்கையோடு எதிர்கொள்பவர்களாகவும் உருவாக்கும் பெரும் பொறுப்பை நிறைவேற்றும் பொருட்டு, ‘இளைஞர்கள் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு’க்கெனத் தனித்துறையை நிறுவிட முடிவு செய்யப்பட்டுள்ளது” என்றார். தொடர்ந்து மார்ச் 28 அன்று விளையாட்டுக்கெனத் தனித்துறை உருவாக்கப்பட்டது.

கலைஞரின் அந்தக் கனவை நனவாக்க, அவரது நூற்றாண்டில், நம் கழகத் தலைவர் முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான ‘திராவிட மாடல் அரசு’, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறையின் மூலம், தமிழ்நாட்டில் உள்ள அனைத்து ஊராட்சிகளுக்கும் ‘டாக்டர் கலைஞர் விளையாட்டு உபகரணங்கள் வழங்கும் திட்டம்’ எனும் புதிய திட்டம் ஒன்றைச் செயல்படுத்தி வருகிறது.

நமது விளையாட்டுத் துறை, வெள்ளி விழாவைக் கொண்டாட இருக்கும் நேரத்தில், அந்தத் துறையை உருவாக்கிய கலைஞரின் பெயரில், ஒரு திட்டத்தைச் செயல்படுத்துவது... காலப் பொருத்தம்.. சாலப் பொருத்தம்..!

## ‘விளையாட்டுத் தலைநகரம்’ எனும் பயணம்!

கல்வி, மருத்துவம், தொழிற்துறை எனப் பல துறைகளில் தமிழ்நாடு முன்னணியில் இருக்கிறது. அதேபோல விளையாட்டுத் துறையிலும் முன்னணியில் இருக்க வேண்டும், தமிழ்நாட்டை இந்தியாவின் விளையாட்டுத் தலைநகரமாக்க வேண்டும் என்ற இலக்குடன் நமது ‘திராவிட மாடல் அரசு’ செயல்பட்டு வருகிறது. அந்தப் பயணத்தில் இதுவரை ‘செஸ் ஒலிம்பியாட்’ முதற்கொண்டு ‘கேலோ இந்தியா இளையோர் போட்டிகள்’ வரை பல தேசிய, சர்வதேச விளையாட்டுப் போட்டிகளை, தமிழ்நாட்டில் நடத்தி உலகின் கவனத்தை ஈர்த்திருக்கிறோம்.

‘அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சி’ என்பதுதான் திராவிட மாடல். அதை விளையாட்டுத் துறையிலும் நம் கழக அரசு நடைமுறைப்படுத்தி வருகிறது. அதன் அடிப்படையில்தான் மாணவர்கள் முதல் முதியோர்கள் வரை, எல்லா வயதினரும் கலந்துகொண்ட முதலமைச்சர் கோப்பைப் போட்டிகளை நடத்தினோம். மாற்றுத் திறனாளிகளுக்கும் ஊக்கத் தொகைகள் வழங்கி, அவர்களின் திறமைகளையும் வெளிச்சத்துக்குக் கொண்டு வந்துள்ளோம்.

## கிராமப்புற திறமைகளைப் பட்டை தீட்ட...

இதன் அடுத்தக் கட்டமாக, விளையாட்டுத் திறமைகளை நகரத்தை மையப்படுத்தியே இருக்காமல், கிராமப்புறங்களிலும் உள்ள திறமைகளை நாம் அடையாளம் கண்டு வருகிறோம். அந்தத் திறமைகளைப் பட்டை தீட்ட, மாவட்டங்களில் சிறந்த விளையாட்டு மைதானம், பயிற்சி மையங்கள், உடற்பயிற்சிக் கூடங்கள், பயிற்சியாளர்கள் நியமனம் போன்றவற்றை விளையாட்டுத் துறை மேற்கொண்டு வருகிறது.

இவற்றின் அடுத்தப் பாய்ச்சலாக, மாநிலத்தில் உள்ள அனைத்து ஊராட்சிகளுக்கும் ’கலைஞர் விளையாட்டு உபகரணங்கள் வழங்கும் திட்டம்’ கொண்டு வரப்பட்டுள்ளது. தமிழ்நாட்டில் மொத்தம் 12,620 கிராம ஊராட்சிகள் உள்ளன. இந்த ஊராட்சிகளுக்கு 86 கோடி ரூபாய் செலவில் 33 விதமான விளையாட்டு உபகரணங்கள் அடங்கிய தொகுப்பு வழங்கப்பட்டு வருகின்றன.

முதற்கட்டமாக, மதுரையில் உள்ள ஊராட்சிகளுக்கு விளையாட்டு உபகரணங்களை வழங்கி, இந்தத் திட்டம் தொடங்கி வைக்கப் பட்டது. அடுத்து கோவை மற்றும் திருவள்ளூர் மாவட்டங்களில் வழங்கப்பட்டுள்ளன.

## வெற்றிக்கு வழிகாட்டு நெறிமுறைகள்

ஒரு திட்டத்தை அறிவித்துவிட்டு, பெயருக்கு அதைத் தொடங்கி வைத்துவிட்டுச் செல்லும் கட்சி அல்ல நமது கழக ஆட்சி. அறிவிக்கப்படும் ஒவ்வொரு திட்டமும் முறையாகச் செயல்படுத்தப்படுகிறதா என்று கண்காணிக்கும். இந்தத் திட்டத்தையும் வெற்றிகரமாகச் செயல்படுத்த, வழிகாட்டு நெறிமுறைகள் வகுக்கப்பட்டுள்ளன.

அதன்படி, இந்த விளையாட்டு உபகரணங்களைப் பராமரிக்க, மாவட்ட அளவிலான விளையாட்டுக் கண்காணிப்புக் குழு மற்றும் ஊராட்சி விளையாட்டு மன்றம் ஆகியவை அமைக்கப்பட வேண்டும். ஒவ்வொரு கிராம ஊராட்சியிலும் உள்ள இளைஞர்கள் தங்களை இந்தக் குழுக்களில் உறுப்பினராகப் பதிவு செய்துகொள்ள வேண்டும். பிறகு, விளையாட்டு உபகரணங்களைப் பயன்படுத்திவிட்டு, மீண்டும் முறையாக ஒப்படைக்க வேண்டும்.

இந்த உபகரணங்கள் முறையாகப் பராமரிக்கப்படுகின்றனவா என்பதைக் கண்காணிக்க, ஊராட்சி மன்றத் தலைவர், ஊராட்சி செயலர், கிராம நிர்வாக அலுவலர், குறிப்பிட்ட ஊராட்சியில் அமைந்துள்ள அரசுப் பள்ளிகளின் தலைமையாசிரியர், அந்தப் பள்ளியின் பள்ளி மேலாண்மைக் குழுத் தலைவர், மகளிர் சுய உதவிக் குழுத் தலைவர் ஆகியோரும் மேற்கண்ட குழுக்களில் உறுப்பினர்களாக இருப்பார்கள்.

இவர்கள் அனைவரும் வட்டார வளர்ச்சி அலுவலரின் வழங்கல் பதிவேடு, ஊராட்சி செயலரின் இருப்புப் பதிவேடு, ஊராட்சி விளையாட்டுக் குழு உறுப்பினர் பதிவேடு, ஊராட்சி செயலரின் வழங்கல் பதிவேடு ஆகிய பதிவேடுகளைப் பராமரித்து, கண்காணிக்க வேண்டும்.

விளையாட்டு வலிமையை மட்டும் தராது. ஊருக்குள் ஒற்றுமையையும் வளர்க்கும். அதற்கு இந்த ’கலைஞர் விளையாட்டு உபகரணங்கள் வழங்கும் திட்டம்’ நல்வித்தாக அமையும்..!

**...சாதனை தொடரும்**



### டாக்டர் கலைஞர் விளையாட்டு உபகரணங்கள் வழங்கும் திட்டத்தில், என்னவெல்லாம் உள்ளன?

(1) கிரிக்கெட் மட்டை. (2) பேட்டிங் கிளவுஸ். (3) விக்கெட் கீப்பிங் கிளவுஸ். (4) பேட்டிங் லெக் கார்டு. (5) ஸ்டம்புகள். (6) அப்டோமினல் கார்டு. (7) கிரிக்கெட் பயிற்சி பந்துகள். (8) கிரிக்கெட் உபகரணப் பை. (9) ஹெல்மெட். (10) இதர பொருட்களை வைத்துக்கொள்ள ஒரு பை. (11) வாலிபால். (12) வாலிபால் வலை. (13) காற்றடிக்கும் பம்பு. (14) கால்பந்து. (15) கோல்கீப்பர் கிளவுஸ். (16) எறிபந்து. (17) எறிபந்து வலை. (18) டம்பெல்ஸ் செட். (2.5, 5, 7.5 கிலோ). (19) டென்னிகாய்ட் ரிங். (20) ஸ்கிப்பிங் கயிறு. (21) கேரம் போர்டு. (22) கேரம் போர்டு ஸ்ட்ரைக்கர் மற்றும் காயின்கள். (23) கேரம் போர்டு பவுடர். (24) சிலம்பம் குச்சிகள். (25) செஸ் போர்டு மற்றும் காயின்கள். (26) நீ கேப். (முழங்கால் கேப்) (27) பிளாஸ்டிக் விசில். (28) அளவெடுக்கும் டேப் (50 மீட்டர்). (29) கோன்ஸ் செட். (30) விளையாட்டுப் பயிற்சிகளுக்கான ஆடைகள். (31) இறகுப் பந்து ராக்கெட். (32) இறகுப் பந்துகள். (33) தொப்பிகள்.

### ஜெயமோகனுக்கும் உண்மைக்கும் துளி அளவாவது சம்பந்தம் உண்டா?

அண்மையில் (பிப்.27, 2024) எழுத்தாளர் ஜெயமோகன் அவரது வலைத்தளத்தில் “தமிழில் தத்துவம் உண்டா?” என்ற தலைப்பில் எழுதியுள்ள கட்டுரையில் (பொய்யுரையில்)

“இந்திய தொல்நூல்களெல்லாம் 18-ஆம் நூற்றாண்டில் ஜெர்மானிய மொழியில் மொழியாக்கம் செய்யப்பட்டன” என்று கூச்சமில்லாமல் எழுதுகின்றார். அப்படி அவரால் குறிப்பிடப்படுகின்ற தொல்நூல்களில் ஒன்றுகூட 18-ஆம் நூற்றாண்டில் ஜெர்மனிய மொழியில் மொழியாக்கம் செய்யப்படவில்லை.

ஜெயமோகனைப் பற்றி நான் முன்பு ஒரு தடவை எழுதியுள்ள கட்டுரையில், “இவர் தப்பிலும் அடிப்பார், தவிலிலும் அடிப்பார், கிழிந்துவிட்டால், தச்சுக்கிட்டும் அடிப்பார்” என்று இவருடைய குணத்தைப் பற்றிக் குறிப்பிட்டிருந்தேன்.

இத்துறையில் ஈடுபட்டு எழுதி வருகின்ற உலக அறிஞர்கள் எவரும் 18-ஆம் நூற்றாண்டில் ஜெர்மனி மொழியில் அவ்வாறான நூல்களை வெளியிட்டதில்லை.

இவ்வாறு உலக அறிஞர்களே துளி கூட அறியாத இத்தகைய உலக ‘பேருண்மையைக்’ கண்டுபிடித்த ஜெயமோகன் தன்னுடைய அரிய கண்டுபிடிப்பின் வாயிலாகத் தெரிந்த ‘ஜெர்மானிய நூல்கள்’ சிலவற்றின் பெயர்களையாவது வெளியிட வேண்டும். அவ்வாறு அவர் அந்நூல்களின் பெயர்களை வெளியிட்டுவிட்டால், ஜெயமோகன் உண்மையானவர்தான் என்று தமிழ் உலகம் நம்பும்.

–ஆய்வாளர் பொ.வேல்சாமி
ஃபேஸ்புக் பதிவு

### ஃப்ளாஷ்பேக்



இளங்கோவன்



### பொதுக் கூட்டத்துக்குப் பாராட்டு!

1993-ஆம் ஆண்டு கழகம் நெருக்கடியான சூழலைச் சந்தித்த வேளையில், அன்றைய இளைஞர் அணிச் செயலாளரும் இன்றைய கழகத் தலைவருமான தளபதி அவர்களை அழைத்து கம்பத்தில் பொதுக்கூட்டம் நடத்தினோம். கூட்டத்தில், பங்கேற்க வருகை தந்த போது என்னுடைய இல்லத்தில் சிறிது நேரம் ஓய்வெடுத்துவிட்டுச் சென்றார். மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளராக இப்படியான கூட்டத்தைக் கூட்டியமைக்கு என்னை அழைத்துப் பாராட்டினார்.

**–எஸ்.டி.டி.இளங்கோவன்,**
**முன்னாள் மாவட்ட முன்னாள் துணைச் செயலாளர்,**
**தேனி.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம் பேட்டை, சென்னை - 600 018. வாட்ஸ்அப் எண் : 90033-24473
மின்னஞ்சல்: youthwing@dmk.in

### கருவூலம்

**விடாமல் போராட்டம்!**

1938-ஆம் ஆண்டு இந்தி மொழி கட்டாயமாக்கப்பட்டபோது தமிழ்நாட்டில் அதற்கு எதிராக உறுதியான போராட்டங்கள் நடைபெற்றன. அதையடுத்து அனைத்துப் பள்ளிகளிலும் இந்தி மொழி என்று எடுக்கப்பட்ட முடிவு, 125 பள்ளிகளில் மட்டுமே செயல்படுத்தப்படும் என அறிவிக்கப்பட்டது. மேலும் முதல் மூன்று பாரங்கள் வரை மட்டுமே என்றும் தேர்வில் வெற்றிபெற வேண்டும் என்கிற அவசியம் இல்லை என்றும் மாற்றங்கள் செய்யப்பட்டன. ஆச்சாரியாரின் தந்திரங்களை அறிந்த பெரியார், சிறிதும் விட்டுக் கொடுக்காமல் போராட்டத்தைத் தீவிரமாக்கினார்.

## திராவிடத்தால் வாழ்கிறோம்

407

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

RNI 1244/57 - Postal Reg.No.MA/43/2024-2026.Licenced to post under without pre payment of postage vide No.TN/WPP-94/SR/2024-2026 Published by Karthikeyan Shanmugasundaram on behalf of Murasoli Trust from No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 and Printed by R.N.Murugan at Dinakaran Press, No.2/2, Melur Main Road, Uthangudi, Madurai - 625 107. Editor: Karthikeyan Shanmugasundaram, Regn.No.7436, Ph:044-2817 9191, 2817 9131 Fax: 2817 9292.